மருத்துவக் கல்விக்கான நீட் தேர்வு என்பது தகுதி, திறமையின் அடையாளமா? ஊழலின் ஊற்றுக் கண்ணா?

# மே 16 தமிழ்நாடு தழுவிய அளவில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம்! உரிமையுடன் அழைக்கிறோம் - ஒத்த கருத்துடையோரே ஓரணியில் திரள்வீர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 13

இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மருத்துவக் கல்விக்கான தகுதித் தேர்வு என்ற பெயரில், நீட் என்ற தேர்வைத் திணித்து கடந்த 10 ஆண்டுகளில் பல நூறு உயிர்கள் பலியாகியுள்ளன. பல்லாயிரக் கணக்கான ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்விக் கனவு பறிக்கப்பட்டது. ஆனால், அதன் உண்மை முகம் அநீதியானது என்பது தொடர்ந்து அம்பலப்பட்டுக் கொண்டே வந்தது.

தமிழ்நாடு முதலில் எச்சரிக்கை செய்தபோது வேடிக்கை பார்த்த பிற மாநிலங்கள் இன்று தான் விழிப்படைந்திருக்கின்றன.

நீட் தேர்வு என்பது, அதைக் கட்டாயப்படுத்திய பா.ஜ.க. அரசு சொன்னது போல, தகுதி திறமையின் அடையாளம் அல்ல; ஊழலின் ஊற்றுக் கண் என்பதற்கு 10 ஆண்டுகளில் 89 முறை வினாத்தாள் கசிவுகள், 48 முறை மறு தேர்வுகள் நடந்துள்ளன என்பதே சான்று அல்லவா? இது கார்ப்பரேட்டுகள் கொழிக்க செய்யப்பட்ட ஏற்பாடு என்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே! உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர் அபிஷேக் சிங்வி நீட் என்பது தேர்வு அல்ல; இது ஏலமாக மாறி வருகிறது என்று தெரிவித்துள்ளாரே!

இந்த முறைகேடுகள் நடந்ததை ஒப்புக் கொண்டு ஒன்றிய அரசு இந்த ஆண்டு மே3 அன்று நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்துள்ளது. 22 லட்சம் மாணவர்கள் அலைக்கழிக்கப்பட்டுள்ளனர். ரத்து செய்யப்பட வேண்டியது இந்த ஒரு நாள் நடந்த நீட் தேர்வு அல்ல; ஒட்டுமொத்தமாகவே "நீட் தேர்வு" ரத்து செய்யப்பட வேண்டும். மருத்துவக் கல்வி நுழைவுக்கு அந்தந்த மாநிலங்கள் தேர்ந்தெடுக்கும் முறையே அரசியலமைப்புச் சட்டப்படியானது.

மாணவர் உரிமை காக்க, மாநில உரிமை காக்க, அரசியலமைப்புச் சட்டத் திரிபுவாதத்தைத் தடுக்க "இந்தியா முழுமையும் நீட் தேர்வையே முற்றாக ரத்து செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தி, திராவிடர் கழகத்தின் சார்பில் மே 16 சனிக்கிழமை காலையில் தமிழ்நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

பொது நோக்கத்துக்காக உரிமையுடன் அழைக்கிறது திராவிடர் கழகம் ஒத்த கருத்துள்ளோர் ஓரணியில் திரள வேண்டுகிறோம்! கழகத் தோழர்களே, களத்திற்கு வாரீர்! உடனடியாக ஆர்ப்பாட்டப் பணிகளைத் தொடங்குவீர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிவித்துள்ளார்.

---

ஊழல் வழக்கை மறைத்ததாக சேலம் மேற்கு தொகுதி

# த.வெ.க. எம்.எல்.ஏ. லட்சுமணனை தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## ஆளுநரிடம் சுயேட்சை வேட்பாளர் மனு!

சென்னை, மே.13-

ஊழல் வழக்கை மறைத்து சேலம் மேற்கு தொகுதி தவெக எம்.எல்.ஏ லட்சுமணனை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என ஆளுநரிடம் சுயேட்சை வேட்பாளர் மனு அளித்துள்ளார். சேலம் மேற்கு தொகுதியில் வெற்றி பெற்றுள்ள தவெக வேட்பாளர் எஸ்.லக்ஷ்மணன் தனது வேட்பு மனு மற்றும் பிரமாணப் பத்திரத்தில் முக்கிய தகவல்களை மறைத்துள்ளதால் அவரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஆளுநரிடம் சுயேட்சை வேட்பாளர் சி.மனோகர் மனு அளித்துள்ளார்.

அவரது மனுவில், தவெக வேட்பாளர் லட்சுமணன் தன்மீது நிலுவையில் இருந்த ஊழல் மற்றும் 'கட்டப்பஞ்சாயத்து' தொடர்பான துறை ரீதியான நடவடிக்கைகளை வேட்பு மனுவில் முழுமையாக தெரிவிக்கவில்லை. அவருக்கு எதிரான விசாரணையில் "நிரூபிக்கப்படவில்லை" என்ற அறிக்கையை தமிழ்நாடு அரசு ஏற்காமல் அவர் ஊழல் செய்திருக்கிறார் என்று கருத்துகளைப் பதிவுசெய்து நடவடிக்கை எடுத்துள்ளது. இது போன்ற சூழலில், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையில் அவர் தகுதி இழந்தவராக அறிவிக்கப்பட வேண்டும். இதுகுறித்து ஆளுநர் உரிய விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கை எடுத்து அவரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

---

மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா திறந்து வைக்கிறார்!

# தாம்பரத்தில் பொதுமக்கள் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல்!

## பகுதிச் செயலாளர் டி.காமராஜ் எம்.சி. வேண்டுகோள்!

தாம்பரம்,மே.13-

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 4,வது மண்டலம். 49,வது வார்டு மார்கெட் பகுதி சண்முகம் சாலையில் உள்ள பால கிருஷ்ண ஸ்டோர் அருகில் 13/5/2026 புதன்கிழமை அன்று காலை 11 மணியளவில் கழக தலைவர் தமிழக முன்னால் முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க பொது மக்களின் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் முன்னால் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்களால் திறக்கப்பட உள்ளது இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் க வசந்தகுமாரி தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவர் எஸ் இந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகர பகுதி நிர்வாகிகள் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, வட்ட செயலாளர்கள் என

அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 4,வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாகக் கூறி

# ரூ.20 கோடி மோசடி; த.வெ.க. நிர்வாகி கைது!

## புதுக்கோட்டையில் பரபரப்பு!

புதுக்கோட்டை, மே 13 -

முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி ரூ.20 கோடி மோசடி செய்த த.வெ.க. நிர்வாகியை புதுக்கோட்டை போலீசார் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருவப்பூர் பகுதியை சேர்ந்தவர் சரவணன் (வயது 35). இவர் தமிழக வெற்றிக் கழகத்தின் புதுக்கோட்டை மத்திய மாவட்டச் செயற்குழு உறுப்பினராக பதவி வகித்து வருகிறார்.

இவர் புதுக்கோட்டை பகுதியில் உள்ள தொழில் அதிபர்கள், வியாபாரிகள் மற்றும் டாக்டர்கள் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

இந்த நிலையில், சரவணன் தான் தொழில் செய்ய பணம் தேவைப்படுகிறது எனவும், அதில் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாகவும் கூறியுள்ளார். இதனை நம்பி புதுக்கோட்டையைச் சேர்ந்த தொழில் அதிபர்கள், முன்னணி வியாபாரிகள், டாக்டர்கள் என மொத்தம் 49 பேர் சரவணனுக்கு பெருந்தொகையை வழங்கியதாக கூறப்படு கிறது.

ஆனால் அவர் கூறியபடி பணத்தை திருப்பிக் கொடுக்காமல் ரூ.20 கோடி வரை மோசடி செய்ததாக கூறப்படுகிறது.


இதையடுத்து, சரவணனால் பாதிக்கப்பட்ட 20க்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் மாலை சென்று புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி, சரவ ணனை கைது செய்தனர். மேலும், இந்த மோசடியில் யாருக்காவது வேறு தொடர்பு உள்ளதா? என்பது குறித்தும், அவர் அந்த பணத்தை எங்கு முதலீடு செய்துள்ளார்? என்பது குறித்தும் அவரிடம் போலீசார் துருவி துருவி விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரூ.20 கோடி மோசடி செய் ததாக த.வெ.க. நிர்வாகி கைது செய்யப்பட்ட சம்பவம் புதுக்கோட்டையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.கே. சுப்பையா
### மே 13 (1996)



பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், 1971ஆம் ஆண்டு, சட்டப்பேரவையில் 'தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் குடியிருப்பு இடங்களை, அவர்களுக்கே சொந்தமாக்கிட வேண்டும்' என முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, உடனடியாக அக்கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து 'பொதுவுடைமை இயக்கத்தில் போராடி, சாணிப் பாலுக்கும், சாட்டையடிக்கும் ஆளானோம். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு துளி மையினால் தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கினார் எனக்கூறி அந்த இயக்கத்திலிருந்து விலகி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டார்.

1978 முதல் 1996 வரை கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

# முதலமைச்சர் அரசியல் பிரிவு அலுவலர் நியமனத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வலியுறுத்தல்!

சென்னை, மே 13-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாடறிந்த பிரபல ஜோதிடர் திரு ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல், தமிழ்நாடு அரசின் முதலமைச்சரின் அரசியல் பிரிவு சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டிருப்பது வியப்பளிக்கிறது. தமிழக வெற்றிக் கழகம், தனது முகப்பு பதாகையில் மதச்சார்பின்மை, சமூகநீதி ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" குறட்பாவை கொள்கை நிலையாக அறிவித்துள்ளது.

முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்கள் ஆன்மீக வழியில்லாமல் கடவுள் மீதும், வழிபாடுகள் மீதும் நம்பிக்கை கொண்டவராக இருக்கலாம்; அது, அவரது தனிப்பட்ட வாழ்க்கை முறையாகும். ஆனால், மதச் சார்பின்மை பண்புகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அரசு எந்த மதச் சார்பு அடையாளத்தையும் கொண்டிருக்கக் கூடாது என்பது நாடு பின்பற்றி வரும் மரபாகும்.

அறிவியல் கண்ணோட்டமும், பகுத்தறிவு சிந்தனையும் வளர்த்து, வலிமைப்படுத்த வேண்டிய அரசு, முதலமைச்சரின் அரசியல் பிரிவு அலுவலராக ஜோதிடர் ஒருவரை நியமித்திருப்பது சரியல்ல.

இது பொதுமக்களிடம் தவறான நம்பிக்கைகளை ஊக்கப்படுத்துவதாவே அமையும் என்பதால், ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை மறுபரிசீலனை செய்து, ரத்து செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு முதல மைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் மு.வீரபாண்டியன் குறிப்பிட்டுள்ளார்.

---

பிளஸ்2 முடித்த மாணவர்கள்

# அரசு திரைப்படக் கல்லூரியில் சேர விண்ணப்பிக்கலாம்!

சென்னை, மே 13-

பிளஸ்2 முடித்த மாணவர்கள் சென்னையில் உள்ள அரசு திரைப்படக் கல்லூரியில் சேர விண்ணப்பிக்கலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழக அரசின் எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் சென்னை தரமணியில் அமைந்துள்ளது.

இக்கல்லூரியில் ஒளிப்பதிவு, டிஜிட்டல் இன்டர் மீடியட், ஒலிப்பதிவு, இயக்கம் மற்றும் திரைக்கதை எழுதுதல், எடிட்டிங், அனிமேஷன் மற்றும் விஷுவல் எஃபெக்ட்ஸ் ஆகிய 6 பாடங்களில் இளங்கலை பட்டப்படிப்பு (பேச்சிலர் ஆஃப் விஷுவல் ஆர்ட்ஸ்) வழங்கப்படுகிறது.

இப்படிப்புகளில் வரும் கல்வி ஆண்டில் (2026-27) சேருவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மாணவர்கள் இதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கக் கையேட்டை www.filminstitute.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்பக் கட்டணம் மற்றும் தேவையான ஆவணங்களுடன் ஜூன் 2ம் தேதி மாலை 5 மணிக்குள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்கண்ட பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க பிளஸ்2 முடித்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

தியாகராயர் நகர் தொகுதி கழக வேட்பாளராகப் போட்டியிட்ட ராஜா அன்பழகன்

# 131-வது வட்டத்தில் பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## கே.ஏழுமலை – கோ.சு.மணி – மு.மணிவண்ணன் – கோமதிமணிவண்ணன் முன்னிலை! மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, மே 13

தியாகராயர் நகர் தொகுதி 131வது வட்டச் செயலாளர் மு.ம.செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட கழக செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில் பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன் மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன் எம்.சி., வட்ட அவை தலைவர் வி.டி. செல்வம் ஆகியோர் முன்னிலையில் இன்று (13-5-2026) மாலை 4.00 மணியளவில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் அவர்கள் பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை கோ.சு.மணி ஆகியோருடன் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

போஸ்டல் காலனி 4வது தெருவில் துவங்கி நாயக்கமார் தெரு, முத்தாலம்மன் கோவில் தெரு, கவரை தெரு, காசிகுளம் வழியாக 61,58,59,60,57வது 7வது அவென்யூ, பாலகிருஷ்ணன் தெரு, 5வது அவென்யு, 23, 25, 19, 17, 15வது தெரு வழியாக 16வது தெரு தெருவில் முடிவடைகிறது.

மேலும் நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி காக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாக பொருப்பாளர்கள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# விமான நிலையம் - கிளாம்பாக்கம் இடையே மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் தொடக்கம்!

சென்னை, மே 13 -

சென்னை விமான நிலையம் - கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை இணைக்கும் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. சென்னையில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகள் மின்சார ரயில் மூலமாக வண்டலூர் சென்று அங்கிருந்து கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் செல்கின்றனர். மேலும் மாநகர பேருந்துகள் மூலம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் சென்றடைகின்றனர். இதனால் பயணிகளின் சிரமத்தை குறைக்க சென்னை விமான நிலையம் வரை உள்ள மெட்ரோ ரயில் திட்டத்தை கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

சென்னை புறநகர் பகுதியான தாம்பரம், பல்லாவரம், குரோம்பேட்டை உள்ளிட்ட பகுதிகள் அசுர வளர்ச்சி அடைந்து வரும் நிலையில் அப்பகுதியில் உள்ள ஜிஎஸ்டி சாலை உள்ளிட்ட முக்கிய சாலைகளில் தினந்தோறும் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதால், அந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை திட்டம் கொண்டு வரப்பட்டால் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் ஒழிக்க முடியும் என அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர். இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் இருந்து, கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் திட்டம் நீட்டிக்கப்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்து பல ஆண்டுகள் ஆன நிலையிலும் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்தது.

இந்நிலையில் சென்னை மெட்ரோ ரயில் திட்டம் கட்டம் 1ல் விமான நிலையத்திலிருந்து கிளா ம்பாக்கம் பேருந்து முனையம் வரை மெட்ரோ ரயிலை மேம்பால சாலையுடன் இணைத்து நீடிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசு சிறப்பு திட்டத் துறை செயலாளரிடம் மெட்ரோ நிர்வாகம் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், சென்னை விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை மெட்ரோ ரயில் சேவையை நீட்டிக்க ரூ.9,335 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், சென்னை விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரையிலான மெட்ரோ வழித்தடத்தில் சென்னை விமான நிலையம், பல்லாவரம், கோதண்டம் நகர், குரோம்பேட்டை, மகாலட்சுமி காலனி, தாம்பரம், இரும்புலியூர், பீர்க்கன்காரணை, பெருங்களத்தூர், வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் ஆகிய 13 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைய உள்ளது.

மேலும் பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர் மற்றும் வண்டலூர் வழியாகச் செல்லும், இது கிளாம்பாக்கம் பேருந்து முனையம், விமான நிலையம் மற்றும் தாம்பரம் ரயில் நிலையம் போன்ற முக்கிய போக்குவரத்து மையங்களுக்கு இணைப்பை வழங்கப்பட உள்ளது. இந்நிலையில் சென்னை விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரை 15.46 கிலோ மீட்டர் மெட்ரோ ரயில் வழித்தடத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் நிலம் கையகப்படுத்தும் பணிகளை தொடங்கவும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு அரசு அனுமதி வழங்கியது. ஆனால், பல்வேறு காரணங்களால் கிடப்பில் போடப்பட்ட இந்த திட்ட பணிகள், தற்போது மீண்டும் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், "கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் செயல்பாட்டுக்கு வந்ததிலிருந்து தென் மாவட்டங்களுக்கு பயணம் செய்யும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் விமான நிலையம் மற்றும் கிளாம்பாக்கம் இடையே நேரடி ரயில் இணைப்பு இல்லாததால் பயணிகள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இந்த பிரச்னைக்கு தீர்வாகவே புதிய மெட்ரோ திட்டம்வடிவமைக்கப்பட்டுள்ளது. சுமார் 15 கிலோ மீட்டர் நீளத்தில் அமையவுள்ள இந்த பாதையில் 12 மெட்ரோ நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால் விமான நிலையத்திலிருந்து கிளா ம்பாக்கம் வரை நேரடி மெட்ரோ பயணம் சாத்தியமாகும். இதன் மூலம் ஜிஎஸ்டி சாலையில் நீண்டகாலமாக இருந்து வரும் போக்குவரத்து நெரிசலும் குறையும்.

இந்த திட்டத்திற்கான விரிவான அறிக்கை ஏற்கனவே ஒன்றிய அரசிடம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தேசிய நெடுஞ்சாலைத் துறை, விமான நிலைய நிர்வாகம் மற்றும் குடிநீர் வாரியம் உள்ளிட்ட பல துறைகளுடன் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. நில அளவீடு மற்றும் பாதை வரைபடப் பணிகளும் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து, தற்போது ஆரம்பகட்ட பணிகள் தொடங்கி யுள்ளது,' என்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.எஸ். ஜானகிராமன்
### மே 13 (1994)



கோவை மாவட்டத்தில் கழகம் வளர்த்த தியாக சீலர். கோவை மாவட்டக் கழக அவைத்தலைவர் பொறுப்பு வகித்தவர்.

கழகப் பொருளாளர் சாதிக்பாட்சா அவர்களின் மறைவு கேட்டு, துடித்துப் போன அவரது பள்ளி நண்பரான ஜானகிராமன் அதிர்ச்சியில் சாதிக் வீட்டு வாசலிலேயே மயங்கி விழுந்து மரணமடைந்து, நட்புக்கு இலக்கணமாக விளங்கியவர்.

"கழகத்தின் எந்தவொரு பதவிக்காகவும், பொறுப்புக்காகவும் பிடிவாதம் பிடிக்காத கண்மணி" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.